தமிழ்

தரம் - 04

மேல்/கள/அல்- முபாறக் கனிஷ்ட வித்தியாலயம் - மள்வானை

ஓட்டைக்கினவி.

www.lkedu.lk

ஆசிரியர் :- M.அப்துல் வாஜித் (B.A, PGDE)

இரட்டைக்கிளவி

- ஒரு குறிப்புச் சொல் இரட்டித்து வந்து பொருள் தருமாயின் அது இரட்டைக்கிளவி எனப்படும்.

1. சல சல

2. மள மள

இரட்டைக்கிளவியில் இணைந்து வரும் சொல்லைத் தனியாகப் பிரித்துப் பார்க்கும் போது பொருள் தராது.

சல சல

மள மள

www.lkedu.lk

இரட்டைக்கிளவி

1. கணீர் கணீர் - மணி ஓசை
2. சல சல - நீர் ஓடும் சத்தம்
3. கம கம - மணம் வீசுதல்
4. கல கல - சிரித்தல்
5. குடு குடு - நடத்தல்
6. சட சட - முறிதல்
7. தள தள - வளர்ச்சி
8. பள பள - மின்னுதல்
9. மட மட - குடித்தல்
10. வழ வழ - பேசுதல்

www.lkedu.lk

இரட்டைக்கிளவிகளைக் கொண்டு வாக்கியம் அமைத்தல்

கணீர் கணீர்

கோயில் மணி கணீர் கணீர் என்று ஒலித்தது.

சல சல

ஓடையில் நீர் சல சல வென ஓடியது.

கம கம

மல்லிகைப் பூ கம கம வென மணம் வீசியது.

www.lkedu.lk

கல கல

பாத்திமா கல கல வெனச் சிரித்தாள்.

குடு குடு

பாட்டி குடு குடு வென நடந்தார்.

சட சட

மரக்கிளை சட சட வென முறிந்தது.

தள தள

தாவரங்கள் தள தள வென வளர்ந்தன.

www.ikedu.lk

பள பள

தங்கம் பள பள வென மின்னியது.

மட மட

குமார் தண்ணீரை மட மட வெனக் குடித்தான்.

வழ வழ

சுகந்தி வள வள வெனப் பேசிக் கொண்டே இருந்தாள்.

www.tkedu.lk

பொருத்தமான இரட்டைக்கிளவிச் சொல்லை இட்டு வாக்கியத்தைப் பூரணப்படுத்துவோம்

1. அப்பா தாகத்தால் தண்ணீரை.....வெனக் குடித்தார்.
   (தட தட / மட மட)

2. பாட்டி சொன்ன நசைச்சுவையைக் கேட்ட பாலன்.....வெனச் சிரித்தான்.
   (கல கல / சல சல)

3. குரங்குகள் தாவியதால் மரக்கிளைகள்.....வென முறிந்து வீழ்ந்தன.
   (கட கட / சட சட)

4. வாய்க்காலில் நீர்.....வென ஓடியது.
   (வள வள / சல சல)

5. அம்மா சமைத்த கோழிக் குழம்பு.....வென மணம் வீசியது.
   (கம கம / தள தள)

www.lkedu.lk

6. பாடசாலை மணி.....என ஒலித்தது.
(பட பட / கணீர் கணீர்)

7. வானதி நட்ட பூச்செடி.....வென வளர்ந்தது.
(தள தள / பள பள)

8. அலுமினியப் பாத்திரங்கள்.....வென மின்னியது.
(சல சல / பள பள)

9. வனித்தா பாடசாலை விட்டு.....வென நடந்து சென்றாள்.
(குடு குடு / பட பட)

10. அவன்.....வெனப் பேசிக்கொண்டே இருந்தான்.
(தட தட / வள வள)

www.lkedu.lk

பொருத்தமான இரட்டைக்கிளவிச் சொல்லை இட்டு வாக்கியத்தைப் பூரணப்படுத்துவோம்

1. அப்பா தாகத்தால் தண்ணீரை.....மட மட.....வெனக் குடித்தார்.
   (தட தட / மட மட)

2. பாட்டி சொன்ன நசைச்சுவையைக் கேட்ட பாலன்.....கல கல.....வெனச் சிரித்தான்.
   (கல கல / சல சல)

3. குரங்குகள் தாவியதால் மரக்கிளைகள்.....சட சட.....வென முறிந்து வீழ்ந்தன.
   (கட கட / சட சட)

4. வாய்க்காலில் நீர்.....சல சல.....வென ஓடியது.
   (வள வள / சல சல)

5. அம்மா சமைத்த கோழிக் குழம்பு.....கம கம.....வென மணம் வீசியது.
   (கம கம / தள தள)

www.lkedu.lk

6. பாடசாலை மணி.....கணீர் கணீர்.....என ஒலித்தது.
(பட பட / கணீர் கணீர்)

7. வானதி நட்ட பூச்செடி.....தள தள.....வென வளர்ந்தது.
(தள தள / பள பள)

8. அலுமினியப் பாத்திரங்கள்.....பள பள.....வென மின்னியது.
(சல சல / பள பள)

9. வனித்தா பாடசாலை விட்டு.....குடு குடு.....வென நடந்து சென்றாள்.
(குடு குடு / பட பட)

10. அவன்.....வள வள.....வெனப் பேசிக்கொண்டே இருந்தான்.
(தட தட / வள வள)

www.lkedu.lk

பின்வரும் இரட்டை கிளவிகளுக்கு பொருத்தமான வாக்கியம் அமைக்குக.

1. சல சல.....

2. கணீர் கணீர்.....

3. மட மட.....

4. குடு குடு.....

5. பள பள.....

www.lkedu.lk

நன்றி

www.tedu.lk